1973 டிசம்பர் 4]

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு, ஏற்புப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/1972) திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவையைக் காலவரையறையின்றி ஒத்தி வைத்தல் குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே,

"அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்த பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால், பேரவையைத் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கலாம்" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்படுகிறது.

பின்னர் பேரவை இரவு 7-02 மணிக்கு காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.